**தலைப்பு – 166 நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களிலிருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்படுவார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு விடயப் பரப்பு

---

தலைப்பு 166 – நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 21 இல் அமைச்சின் செயலாளருக்கு நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம்

என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு பின்வரும் குறிப்பில் காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 127(1)(அ) | சரியானதாகவும் நிதி முன்னுரிமைகளுடனும் தொழில்கள் கொடுக்கல் வாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துவதற்கு சகல நிதி வேலைகளும் திட்டமிடப்படுகின்றன. | 1. கொள்வனவு நடவடிக்கைகள் திட்டமிடப்படாமை<br>2. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.4<br>2.9 |
| 127(1)(ஆ) | செலவினங்கள் மற்றும் வருமான சேகரிப்புகள் மீது போதியளவு கட்டுப்பாடுகள் வழங்கப்படுகின்ற முறைமையொன்று நிறுவப்பட வேண்டும். | 1. முகாமைத்துவக் குறைபாடுகள்<br>2. இணக்கமின்மைகள்<br>3. மனிதவள முகாமைத்துவத்தில் உள்ள குறைபாடுகள் | 2.7(அ)<br>2.10<br>2.11 |
| 127(2) | புதிய செலவினங்களிற்கான பிரேரணைகள் அல்லது அதிகரிக்கின்ற செலவினங்கள் என்பவற்றினைப் போல இருக்கின்ற செலவினங்களிற்கும் சிக்கனம் மற்றும் வினைத்திறமை என்பவற்றின் நோக்கில் அமைச்சால் நெருக்கமாக கண்காணிக்கப்படுகின்றன. | 1. தாமதத்துடன் தொடங்கப்பட்ட செயற்திட்டங்கள்<br>2. அமுலாக்கப்படாத செயற்திட்டங்கள்<br>3. நகரங்களை தரமுயர்த்துவதற்காக பிரதான திட்டமொன்று தயாரித்தல்<br>4. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.2.1 (அ)<br>2.2.1 (ஆ)<br>2.2.1 (இ)<br>2.6 |

| | | | | |
|---|---|---|---|---|
| 127(3) | ஐயத்திற்கிடமாக அல்லது கடினமாகவுள்ள சகல வழக்குகளிலும் அவருடைய சொந்த நிர்வாக அனுபவம் மற்றும் அவற்றினுடைய விளைவிற்கான தீர்ப்பு கட்டாயமாக அவருக்கு இருக்க வேணடுமென சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டன. | 1. | குழும வாகனங்கள் | 2.5(அ) |
| | | 2. | சொத்துக்களின பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை | 2.5(ஆ) |
| | | 3. | வேறு நிறுவனங்களிற்கு சொந்தமான வாகங்களின் முறையற்ற பயன்பாடு | 2.5(இ) |
| 127(5) | மதிப்பிடப்பட்ட ஏற்படுகளிற்கும் செலவினங்களிற்கும் இடையிலான முக்கியமான முரண்களை அமைச்சில் பாரிய பரீட்சிப்பனைப் பெறல் | 1. | கிடைக்கப்பெற்ற நிதியேற்பாடுகளை பன்படுத்தாமை | 2.8(அ)(i) |
| | | 2. | குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் செய்யப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்தாமை | 2.8(அ)(ii) |
| | | 3. | முழுமையாக நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் செய்யப்பட்ட நிதியேற்பாடுகளின் சேமிப்பு | 2.8(அ)(iii) |
| | | 4. | வேறு கருத்திட்டங்களிற்கு செய்யப்பட்ட மதிப்பிடப்பட்ட முழு நிதியேற்பாடுகளையும் மாற்றுதல் | 2.8(அ)(iv) |
| | | 5 | நிதியேற்பாடுகளின் குறைபயன்படுகள் | 2.8(அ)(v) |
| | | 6. | அமுலாக்கலின் கீழான நீர் வழங்கல் செயற்திட்டங்கள் | 2.8(அ)(vi) |
| | | 7. | சுங்கதத் தீர்வைகளின் கூற்று | 2.8(அ)(vii) |
| | | 8. | மேலதிகமாக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடுகள் | 2.8(அ)(viii) |

## 2. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 அமைச்சின் பிரதான செயற்பாடுகள்

1. கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் வடிவமைத்தல் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் விடயங்கள் மற்றும் அமைச்சின் பார்வையின் கீழ் வருகின்ற திணைக்களங்கள் மற்றும் நியத்திச்சட்ட சபைகள் என்பவற்றின் வியங்கள் தொடர்பான கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு.

ii. விசேட நகர திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்.

iii. நகர அபிவிருத்தி நடவடிக்கைகளின் தேசிய பௌதீக அடிப்படையில் சகல நிர்மாண வேலைகளின் செயற்பாடு மற்றும் அமுலாக்கல்.

iv. சகல குடியுரிமையாளர்களிற்கும் சுத்தமான குடிதண்ணீர் வழங்கலை உறுதிப்படுத்துவதற்கான அளவீடுகளை பின்பற்றல்.

v. நீர் வழங்கல் சேவைகளின் புலனாய்வு, திட்டமிடல், வடிவமைப்பு, நிர்மாணம், செயற்பாடு மற்றும் பராமரிப்பு, வடிகாலமைப்பு முறைமைகள் மற்றும் சுகாதார வசதிகள்.

vi. சமுதாய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் செயற்திட்டங்களின் வினைத்திறனான மற்றும் முறைமையான நிறைவேற்றலிற்காக அவசியமான அளவீடுகளை பின்பற்றுதல்.

vii. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் என்பவற்றிற்கு ஒதுக்கப்பட்டிருந்த வேறு விடயங்கள் தொடர்பான நடவடிக்கைகளை நிறைவேற்றல்.

viii. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் என்பவற்றின் கண்காணிப்பு நடவடிக்கைகள்.

**2.2 செயலாற்றல்**

**2.2.1. செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அ) தாமதப்பட்ட செயற்திட்டங்கள்**

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அன்டரகஸ்யயா முதல் கன்னோருவா வரை நிலத்தடி நீர் தேக்கத்திலிருந்து குழாய்கள் குழாயிடுவதன் இரண்டாவது கட்டத்திற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது பாதீட்டு மதிப்பீடுகளில் எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்காததிருப்பினும், குறைநிரப்பு மதிப்பீடுகளில் முறையே ரூபா 214.93 மில்லியன் மற்றும் ரூபா 100 மில்லியன் கிடைத்திருந்தது. எவ்வாறாயினும், முழு ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது. ரூபா 70 மில்லியன் தொகையான பாதீட்டு ஏற்பாடுகள் மீளாய்வாண்டின் போதும் இந்த செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 12.43 மில்லியன் அல்லது 18 சதவீதம் மாத்திரம் செலவேற்பட்டிருந்தது.

**ஆ) அமுலாக்கப்படாத செயற்திட்டங்கள்**

i). உள்நாட்டு செலவினம் (குறியீட்டு இல. 17) தொடர்புபட்ட வெளிநாட்டு நிதியின் நிதித் குறியீட்டின் கீழ் பெரிய மட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2 நீர் வழங்கல் செயற்திட்டங்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 60 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

ii) வெளிநாட்டு கடன்களின் கீழ் அமுலாக்கப்படுகின்ற 21 நீர் வழங்கல் செயற்திட்டங்களில் 05 செயற்திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை இதிலிருந்து ரூபா 2,920 மில்லியன் தொகையான முழு ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருக்கவில்லை.

**இ) நகரங்களின் தரமுயர்த்தலிற்காக பிரதான திட்டமொன்று தயாரித்தல் (166-2-3-33-2506)**

நகரங்களின் தரமுயர்த்தலிற்காக பிரதான திட்டமொன்று தயாரித்தலிற்காக மீளாய்வாண்டின் போது குறைநிரப்பு மதிப்பீடுகளில் ரூபா 3,355.38 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் கிடைத்திருந்தது. அவற்றில் ரூபா 1,220.61 மில்லியன் மாத்திரம் செலவேற்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(i) செயல்நடவடிக்கை திட்டத்தின் பிகாரம் போலி நகரமொன்றால் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டு நகர அபிவிருத்திக்காக ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ரூபா 2,454.44 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் 15 மாவட்டங்களிற்காக மீளாய்வாண்டின் போது

வழங்கப்பட்டிருந்ததுடன் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக ரூபா 1,211.93 மில்லியன் தொகை மாத்திரம் ஏற்பட்டிருந்தது.

(ii) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 12 செயற்திட்டங்களிற்காக ரூபா 529.78 மில்லியன் கூட்டுத் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் நிதிப் பயன்பாடுகள் ரூபா 156.32 மில்லியன் தொகையாக இருந்தது. அந்த செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 10 சதவீதத்திற்கும் 60 சதவீதத்திற்கும் இடையான வீச்சில் இருந்தது.

## 2.3 நிலைபேறான அபவிருத்தி

சுத்தமான தண்ணீர் மற்றும் சுகாதார சேவைகளின் ஏற்பாடுகள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களாக இனங்காணப்பட்டிருந்ததுடன் குழாயிடப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரின் ஏற்பாட்டு ரீதியான அமுலாக்கல் மற்றும் கழிவகற்றல் மற்றும் நீர்தேக்க சுத்திகரிப்பின் அமுலாக்க என்பன இலக்கிடப்பட்டிருந்தது. சகலருக்குமான பாதுகாப்பான குடிதண்ணீர் மற்றும் சுகாதாரம் குறிகாட்டிகளாக இனங்காணப்பட்டிருந்தது. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களின் அடைதலில் அக்கறையுடைய தரப்பினர்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அவர்களிற்கு சுற்றறிக்கைகள் ஊடாக நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வுகள் நடாத்தப்பட்டது.

## 2.4. கொள்வனவுத் திட்டம்

அமைச்சிற்காக கொள்வனவு திட்டமென்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் கொள்வனவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காமல் மீளாய்வாண்டின் போது ரூபா 41.05 மில்லியன் தொகைக்கு வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுச் செவ்வையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) குழும வாகனங்கள்

பயன்படுத்த முடியாத நிலையில் இருந்த 07 வாகனங்கள் மற்றும் 04 மோட்டார் சைக்கிள்கள் அமைச்சு வளாகத்தில் தரித்துவிடப்பட்டிருந்தது.

### (ஆ) சொத்துக்களின் பாதகாப்பினை உறுதிப்படுத்தாமை

அமைச்சின் வாகனப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த, ஆனால் வேறொரு அரசாங்க நிறுவனத்தின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருந்த மோட்டார் வாகனமொன்று அமைச்சால் காப்புறுதி செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 33,337 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அமைச்சின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேட்டின் பிரகாரம், மேற்குறிப்பிடப்பட்ட வாகனம் 2017 சனவரி 10 முதல் 2017 ஒக்தோபர் 26 வரையான காலத்தின் போது ஒரு தடவையேனும் அமைச்சிற்கு வருகைதந்தோ அல்லது வெளிச்சென்றோ இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### (இ) அரச நிறுவனங்களிற்கு சொந்தமான சொத்துக்களைப் பயன்படுத்தல்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு சொந்தமான 03 வாகனங்கள் மற்றும் வேறு அரச நிறுவனங்களிற்கு சொந்தமான 17 வாகனங்கள் உள்ளடங்கலாக 20 வாகனங்கள் முறையான வழியில் சுவீகரிக்கப்படாமல் அமைச்சால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சின் கீழ் அமுலாக்கப்படுகின்ற நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்ற செயற்திட்டத்தின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டிருக்காத 10 உத்தியோகத்தர்கள் இந்தோனிசியாவில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களிற்கு ரூபா 6.13 மில்லியன் ஏற்பட்டிருந்தது.

**2.7 முகாமைத்துவ நலிவுகள்**

முனேஸ்வரம் நீர் வழங்கல் அலுவலகத்திற்கு முன்னால் அமைந்திருந்த காணியானது காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 38(அ) உபபிரிவின் கீழ் 2013 யூன் 21 இல் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் அது 2014 நவம்பர் 16 ஆந் திகதிய சிலாபம் பிரதேச செயலாளரின் கடிதம் மூலம் ரூபா 9.85 மில்லியன் பெறுமதியிடப்பட்டிருந்தது. இதன்படி, உரியவாறு இழப்பீட்டினை விடுவிப்பதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சபையானது அதனை செய்வதற்கு தவறியிருந்ததுடன் இதன் விளைவால் மதிப்பீடு மீது கணிப்பிடப்பட்ட வட்டியாக 2017 ஏப்ரல் 11 இல் ரூபா 2,623,406 ஆன தொகை விடுவித்திருந்தது. இதன்படி இந்த மேலதிக கிரயம் உரிய காலத்தில் இழப்பீட்டு கொடுப்பனவு செய்ய தவறியமையால் ஏற்படவேண்டியிருந்தது.

**2.8 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல்.**

**அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியினுள் அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 187.7 | 187.1 | 0.6 | 0.3 |
| | மூலதனம் | 34,771.0 | 25,888.6 | 8,882.4 | 25.5 |
| | **மொத்தம்** | **34,958.7** | **26,075.7** | **8,883.0** | **25.4** |
| 2014 | மீண்டெழுபவை | 214.8 | 210.0 | 4.8 | 2.2 |
| | மூலதனம் | 30,601.1 | 27,039.3 | 3,561.8 | 11.6 |
| | **மொத்தம்** | **30,815.9** | **27,249.3** | **3,566.6** | **11.6** |
| 2015 | மீண்டெழுபவை | 213.1 | 210.9 | 2.2 | 1.0 |
| | மூலதனம் | 39,122.7 | 30,080.2 | 9,042.5 | 23.1 |
| | **மொத்தம்** | **39,335.8** | **33,291.1** | **9,044.7** | **23.0** |
| 2016 | மீண்டெழுபவை | 171.2 | 167.0 | 4.2 | 2.5 |
| | மூலதனம் | 34,560.2 | 26,410.2 | 8,150.0 | 23.5 |
| | **மொத்தம்** | **34,731.4** | **26,577.2** | **8,154.2** | **23.5** |
| 2017 | மீண்டெழுபவை | 180.5 | 179.2 | 1.3 | 0.7 |
| | மூலதனம் | 33,814.1 | 26,908.2 | 6,905.9 | 20.4 |
| | **மொத்தம்** | **33,994.6** | **27,087.4** | **6,907.2** | **20.3** |

**(i) கிடைக்கப்பெற்ற நிதியேற்பாடுகளை பயன்படுத்தாமை**

ரூபா 60.48 மில்லியன் தொகையான 03 கருத்திட்டங்கள் மற்றும் 02 செயற்திட்டங்களிற்காக கிடைக்கப்பெற்ற மொத்த நிதியேற்பாடுகளும் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. இந்த 03 கருத்திட்டங்களில் 02 கருத்திட்டங்களிற்காக கிடைக்கப்பெற்ற முழு நிதியேற்பாடுகளும் 2016 ஆம் ஆண்டுவரையும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ii) குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் நிதியேற்பாடுகளை பயன்படுத்தாமை**

அரச தனியார் பங்குபற்றலுடன் யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் பிராந்தியத்தில் கடல் நீரிலிருந்து உப்பினை அகற்றலின் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாணடின் போது குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் ரூபா 250 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆண்டின் போது செயற்திட்டம் அமுலாக்கப்படாமையால் முழு ஏற்பாடுகளும் செமிக்கப்பட்டிருந்தது.

**(iii) நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் கிடைத்த முழு நிதியேற்பாடுகளின் சேமிப்பு**

ஊவா மாகாணத்தில் பண்டாரவளை நீர் வழங்கல் திட்டத்தினை தரமுயர்த்தும் நோக்கில் ரூபா 115 மில்லியன் தொகையான ஏற்பாடு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆண்டின் போது செயற்திட்டம் அமுலாக்கப்படாமையால் முழு ஏற்பாடுகளும் செமிக்கப்பட்டிருந்தது.

**(iv) வேறு கருத்திட்டங்களிற்கு மதிப்பிடபடப்ட முழு ஏற்பாடுகளையும் மாற்றுதல்**

04 கருத்திட்டங்களிற்காக கிடைத்திருந்த ரூபா 1.8 மில்லியன் தொகையான முழு ஏற்பாடுகளும் வேறு கருத்திட்டங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது.

**(v) ஏற்பாடுகளின் குறைபயன்பாடு**

09 கருத்திட்டங்கள் தொடர்பில் தேறிய ஏற்பாடுகளின் சதவீதமொன்றாக சேமிப்புகள் 31 சதவீதத்திற்கும் 97 சதவீதத்திற்கும் இடையில் இருந்தது. மேலும், மேற்குறிப்பிட்ட கருத்திட்டங்களில் 3 கருத்திட்டங்களிற்காக ஏற்பாடுகள் கிடைத்திருக்காததுடன் வழங்கப்பட்ட குறைநிரப்பு ஏற்பாடுகளின் சேமிப்புகள் முறையே 64, 81 மற்றும் 97 சதவீதமாக இருந்தது.

**(vi) நீர் வழங்கல் செயற்திட்டங்களின் அமுலாக்கல்**

ஆண்டின் போது வெளிநாட்டு நிதியளிப்பு உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்பட்ட 21 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் தொடர்பில் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 15,000 மில்லியன் தொகையான ஏற்பாடொன்று செய்யப்பட்டிருந்ததுடன் 08 செயற்திட்டங்களிற்காக ரூபா 6,191.45 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த தொகையை விஞ்சி ரூபா 4,099.32 மில்லியன் ஏற்பட்டிருந்தது.

**(vii) சுங்கத் தீர்வைகளின் கூற்று**

பெரிய மட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டங்களின் (166-2-5) கீழ் அமுலாக்கப்பட்ட 05 செயற்திட்டங்கள் தொடர்பில் 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகள் தொடர்பில் செலுத்தவேண்டிய ரூபா 927.6 மில்லியன் தொகையான சுங்கத் தீர்வைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன்படி, இந்தச் செயற்திட்டத்தின் மொத்தச் செலவினம் மீளாய்வாண்டின் போது ரூபா 1,215.06 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், மொத்தச் செலவினம் ரூபா 287.46

மில்லியன் அல்லது 24 சதவீதமாக மாத்திரம் மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்தது. 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகள் தொடர்பில் தீர்க்கப்பட்ட சுங்கத் தீர்வையில் இது உள்ளடக்கப்பட்டிருந்தது.

**(viii) மிகையாக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடுகள்**

காணிச் சுவீகரிப்பு கருத்திட்டத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட ஏற்பாடு ரூபா 1,000 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் நிலுவையாவிருக்கின்ற சுங்கத் தீர்வைகளை தீர்ப்பதற்கு ரூபா 700 மில்லியனும் நீர் வழங்கல் திட்டத்தின் முன்னேற்றத்திற்கான செயற்திட்டமொன்றிற்கு ரூபா 115 மில்லியன் மாற்றப்பட்டிருந்தது. இதன்படி, இந்தச் கருத்திட்டத்தின் கீழ் மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ரூபா 815 மில்லியன் அல்லது 81.5 சதவீத ஏற்பாடு மாற்றிய பின்னர் ரூபா 185 மில்லியன் தேறிய ஏற்பாடுகளில் ரூபா 162.82 மில்லியன் மாத்திரம் செலவேற்பட்டிருந்தது.

## 2.9 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 891 (1) ஆம் பிரிவின் பிரகாரம், பிணை வழங்க வேண்டுமென தேவைப்பட்ட சகல உத்தியோகத்தர்களின் பெயர்களை கொண்டுள்ள பிணைமுறை பதிவேடொன்று திணைக்களதாடால் பேணப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இதனை அவ்வாறு செய்வதற்கு தவறியிருந்தது.

## 2.10 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி ரூபா மில்லியன் | இணங்காமை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | |
| (i) நிதிப்பிரமாணம் 170(2) | 10 | நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட வெள்ள நன்கொடைகள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்காமல் வைப்புக் கணக்கில் விடப்பட்டு செலவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 1646 | | நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்புகள் என்பன அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். எவ்வாறாயினும், இது நாளது வரையாக்கப்பட்டு சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தது. |

| | |
|---|---|
| (iii) நிதிப்பிரமாணம் 891 | பிணைமுறி வழங்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைமுறி பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை<br>2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1/2010 ஆம் இலக்க கடிதத்தின் 03 ஆம் பந்தி | அமைச்சின் செயலாளின் பயன்பாட்டிற்காக ஆகக்கூடியதாக 03 வாகனங்களின் எண்ணிக்கை ஒதுக்கப்பட்ட போதிலும், இது அதனை விஞ்சியிருந்தது. |

## 2.11. மனிதவளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்கள் மீதான செலவினங்கள்**

**(i)** மேற்குறிப்பிட்ட பந்தி 2.1 இல் குறிப்பிட்ட செயற்பாடுகளை செயற்படுத்தும் நோக்கில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன. அமைச்சானது மீளாய்வாண்டிற்கான ஆளணி வெதனங்களின் கருத்திட்டத்திற்காக ரூபா 88 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்தது. இதன்படி, அண்ணளவாக ஒரு நபருக்கான மூலதனச் செலவினம் ரூபா 830,189 ஆக இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஸ்ட நிலை | 27 | 19 | 08 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 02 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 80 | 51 | 29 |
| (iv) | ஆரம்ப நிலை | 41 | 34 | 07 |
| | **மொத்தம்** | **153** | **106** | **47** |

(ii) 2017 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய டிஎம்எஸ்/7777/டபிள்யூஏஎஸ்எஸ்ஜபி ஆம் இலக்க முகாமைத்துவ திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம், ஒப்பந்த அடிப்படையில் நான்கு (4) ஆண்டுகளிற்காக நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்கள் நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்ற செயற்திட்டத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு முரணாக அமைச்சின் இரண்டு உத்தியோகத்தர்கள் பகுதி நேர அடிப்பயில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**(ஆ) முறையற்றவழயில் வேறு தரப்பினரால் பெறப்பட்டிருந்த மனித வளங்கள்**

---

(i) நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், (2018 பெப்ரவரி 06 ஆந்திகதி 01/07/23 ஆம் இலக்க கடிதம்) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் 79 உத்தியோகத்தர்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(ii) கணக்காய்விற்கு அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட 2018 யூன் 01 ஆந் திகதிய 2/1/2015/09-1 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் 38 உத்தியோகத்தர்கள்/ அலுவலர்கள் மாத்திரம் அமைச்சில் வேலை செய்கின்றனர். அந்த உத்தியோகத்தர்கள்/ அலுவலர்கள் 1995, 2008, 2013 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிலிருந்து பொறியியல் உதவியாளர், முகாமைத்தவ உதவியாளர், அளவை மாணி வாசிபவர், சாரதி போன்ற வித்தியாசமான பதவிகளில் அமைச்சில் வெலை செய்கின்றனர்.

(iii) சம்பளங்கள் மற்றும் கூலிகளாக 2015 திசெம்பர் முதல் 2017 நவம்பர் வரையான இரண்டு ஆண்டு காலமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் ரூபா 82,916,013 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

*M*